දුරස්ථ හා අඛණ්ඩ අධ්‍යාපන කේන්ද්‍රය - පේරාදෙණිය විශ්වවිද්‍යාලය
தொடர் தொலைக் கல்வி நிலையம் - பேராதனைப் பல்கலைக்கழகம்
CENTRE FOR DISTANCE & CONTINUING EDUCATION – UNIVERSITY OF PERADENIYA

# Bachelor of Arts (External-New Syllabus) Examination 100 Level 2025

இளங்கலைமாணி முதலாம் ஆண்டுப் பரீட்சை (வெளிவாரி புதியபாடத்திட்டம்) (2025)

## ECNE 101: அறிமுகப் பொருளியல் (Introduction to Economics)

**அறிவுறுத்தல்கள்:**

- **ஏதாவது ஐந்து** (05) வினாக்களுக்கு மட்டும் விடை தருக.
- அனுமதிக்கப்பட்ட நேரம்: **மூன்று** மணித்தியாலங்கள்
- ஒதுக்கப்பட்ட புள்ளிகள்: ஒவ்வொரு வினாவிற்கும் தலா 20 புள்ளிகள்

---

1. i. பயன் கோட்பாட்டுக்கும் கேள்விக் கோட்பாட்டுக்கும் இடையிலான தொடர்பை விளக்குக. (06 புள்ளிகள்)

   ii. "நுகர்வோன் சமனிலை" என்ற எண்ணக்கருவினால் நீர் விளங்கிக்கொள்வது யாது? (06 புள்ளிகள்)

   iii. ஒரு பொருளின் சந்தை விலை அதிகரித்தால், புதிய நுகர்வோர் சமனிலை மட்டத்தை அடைவதற்கு என்னென்ன சரிப்படுத்தல்கள் செய்யப்படவேண்டும்? (08 புள்ளிகள்)

2. i. நிறைபோட்டித் தொழிலின் கேள்வி மற்றும் நிரம்பல் சமன்பாடுகள் கீழே தரப்பட்டுள்ளன.

   கேட்கப்பட்ட தொகை: $P = 30 - \frac{1}{3}Q_d$

   நிரம்பல் செய்யப்பட்ட தொகை: $P = 6 + \frac{1}{3}Q_s$

   a. தொழிலின் சமனிலை விலை (P) மற்றும் தொகையைக் (Q) கணிப்பிடுக. (04 புள்ளிகள்)

   b. சமனிலையில் கேள்வி மற்றும் நிரம்பல் நெகிழ்சிகளைக் கணிப்பிடுக. (04 புள்ளிகள்)

   ii. "அரசாங்கத்தின் வரி வருவாயின் அளவு, கவனத்திற்கொள்ளப்பட்ட பொருட்களின் கேள்வி மற்றும் நிரம்பல்சார் விலை நெகிழ்ச்சியில் தங்கியுள்ளது".

   a. விலைசார் நிரம்பல் நெகிழ்ச்சி அரசாங்க வரிவருவாயின் அளவை எவ்வாறு பாதிக்கின்றது என்பதை விளக்குக. (06 புள்ளிகள்)

   b. விலைசார் கேள்வி நெகிழ்ச்சி அரசாங்க வரிவருவாயின் அளவை எவ்வாறு பாதிக்கின்றது என்பதை விளக்குக. (06 புள்ளிகள்)

3. i. உற்பத்திச் சார்பு என்பதன் அர்த்தத்தினை சுருக்கமாக விளக்குக. (04 புள்ளிகள்)

   ii. குறுங்கால மற்றும் நீண்டகால உற்பத்திச் சார்புகளுக்கிடையிலான வேறுபாட்டை சுருக்கமாக விளக்குக. (04 புள்ளிகள்)

   iii. $Q = 2K^{1/3}L^{1/3}$ என்னும் உற்பத்திச் சார்பினைக் கவனத்திற்கொள்க. இங்கு, Q என்பது மொத்த வெளியீட்டினது தொகை, K மற்றும் L என்பன முறையே பயன் படுத்தப்பட்ட முதல் மற்றும் ஊழிய உள்ளீடுகளின் அளவுகள் ஆகும்.

   மூலதனம் 125 அலகுகளில் நிலையானது எனக் கருதி ஊழியத்தின் எல்லை உற்பத்திச் ($MP_L$) சார்பினைத் தருவிக்குக. (06 புள்ளிகள்)

   iv. K மற்றும் L ஆகிய இரண்டும் 25% இனால் அதிகரிப்பதாகக் கருதுக. வெளியீட்டிற்கு என்ன நிகழும்? ஏன்? காரணங்கள் தருக. (06 புள்ளிகள்)

4. i. "சந்தைத் தோல்வி" என்பதனால் நீர் விளங்கிக்கொள்வது யாது? சந்தைத் தோல்விக்கான பிரதான காரணங்களைச் சுருக்கமாக விளக்குக. (10 புள்ளிகள்)

ii. சந்தைப் பொருளாதாரத்தில் அரசாங்கத்தின் வகிபங்கினை நீர் எவ்வாறு விளக்குவீர்? (10 புள்ளிகள்)

5. ஒரு பொருளாதாரம் தொடர்பான பின்வரும் தகவல்களைக் கவனத்திற்கொள்க (எல்லாப் பெறுமதிகளும் மில்லியன் ரூபாவில் தரப்பட்டுள்ளது).

நுகர்வு $C = 180 + 0.8\,Y^d$ ($Y^d$: செலவிடத்தகு வருமானம்)

முதலீடு $\bar{I} = 300$

அரசாங்க செலவீடு $\bar{G} = 400$

வரி வருமானம் $T = 100 + 0.25Y$

தேறிய ஏற்றுமதி $(X - M) = 200$

i. பொருளாதாரத்தின் சமனிலை GDP மட்டத்தினைக் கணிப்பிடுக. (04 புள்ளிகள்)

ii. வருமானப் பெருக்கியின் (income multiplier) பெறுமதியை மதிப்பிடுக. (04 புள்ளிகள்)

iii. முதலீடு 200 மில்லியனாகக் குறைவடைகிறது எனக் கருதிக்கொள்க. புதிய சமனிலை GDP மட்டம் யாது? (04 புள்ளிகள்)

iv. புதிய சமனிலை வருமான மட்டத்தில் அரச வரவுசெலவுத்திட்ட பற்றாக்குறையைக் கணிப்பிடுக. (04 புள்ளிகள்)

v. தன்னிச்சையான செலவுகளுக்கும் (autonomous expenditures) தூண்டப்பட்ட செலவுகளுக்கும் (induced expenditures) இடையிலான வேறுபாடு யாது? (04 புள்ளிகள்)

6. i. பிரதான பேரினப்பொருளாதார இலக்குகளை அடையாளப்படுத்துக. (04 புள்ளிகள்)

ii. மெய்த் தலா மொத்த உள்நாட்டு உற்பத்தி ஏன் வாழ்க்கைத் தரத்தினை அளவிடுவதற்கான ஒரு சிறந்த குறிகாட்டி அல்ல என்பதற்கு ஐந்து காரணங்களை விளக்குக. (05 புள்ளிகள்)

iii. பணவீக்கத்துடன் தொடர்புடைய பின்வருவனவற்றை விளக்குக.
   a. விலை விளைவுகள் (Price effects)
   b. வருமான விளைவுகள் (Income effects)
   (தலா 02 புள்ளிகள்)

iv. பின்வரும் எண்ணக்கருக்களுக்கிடையிலான வேறுபாட்டை சுருக்கமாக விளக்குக.
   a. மெய் GDP உம் பெயரளவு GDP உம் (Real GDP and nominal GDP)
   b. தனிநபர் வருமானமும் செலவிடத்தகு வருமானமும் (Personal income and disposable income)
   (தலா 02 புள்ளிகள்)

v. நாணயத்தளத்தின் கூறுகளை விளக்குக. நாணயத்தளத்தைப் பாதிக்கும் காரணிகள் யாவை? (03 புள்ளிகள்)

7. பின்வருவனவற்றுள் எவையேனும் <u>நான்கினை</u> சுருக்கமாக விளக்குக.

i. வருமான நுகர்ச்சி வளையி (Income consumption curve)

ii. குறைந்து செல்லும் எல்லை விளைவு விதி (Law of diminishing marginal returns)

iii. அளவுத்திட்ட விளைவு விதி (Law of returns to scale)

iv. கெயின்சியன் பணத்துக்கான கேள்விக் கோட்பாடு (Keynesian theory of demand for money)

v. பணவீக்க இடைவெளியும் பணச்சுருக்க இடைவெளியும் (Inflationary gap and deflationary gap)

vi. அரசாங்கத்தால் விதிக்கப்படும் உச்ச விலை மற்றும் இழிவு விலையின் நோக்கங்கள் (Objectives of government – imposed price ceilings and price floors)

(தலா 05 புள்ளிகள்)